சென்னையிலிருந்து காரைக்குடிக்கு துரித இரயில் வண்டி விடும் திட்டம்.

*வினா எண்—784 திரு. என். இட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து மாயூரம் திருவாரூர் வழியாக காரைக் குடிக்கு எக்ஸ்பிரஸ் இரயில் வண்டி விட இரயில்வேத் துறைக்கு அரசு பரிந்துரை செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

மாயூரத்திலிருந்து சென்னைக்கு மேலும் ஒரு விரைவுப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 785—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து சென்னைக்கு மேலும் ஒரு இரவு நேர விரைவுப் பேருந்து விட வேண்டும் எனும் கோரிக்கை வந்துள்ளதா

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

சேலம்—கன்னியாகுமரி விரைவு பேருந்துப் பணி.

*வினா எண். 786—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும்விரைவு பேருந்து (இரவு 9 மணி சுமாருக்கு) பெருந்துறையில் நிற்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

சேலம்—கன்னியாகுமரி துரிதப் பேருந்து தற்போது பெருந்துறை வழியாக இயக்கப்படவில்லை. எனவே, இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பெருந்துறை ஒரு தாலுகாவின் தலைநகர். அது மட்டுமல்ல. அங்கிருந்து அதிகமாக பயணிகள் வெளி ஊர்களுக்கு செல்லவேண்டியிருக்கிறது ஆனால் பஸ் வசதி இல்லை. ஆகவே, புதிதாக சேலத்திலிருந்து பெருந்துறை வழியாக பேருந்து விடுவதற்கும், அந்த பேருந்து பெருந்துறையில் நின்று செல்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

TRUTH ALONE TRIUMPHS